செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
(தன்னாட்சி நிறுவனம், கல்வி அமைச்சகம், இந்திய அரசு)
செம்மொழிச் சாலை, பெரும்பாக்கம், சென்னை – 600100
CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL
(An Autonomous Institution under the Ministry of Education, Government of India)
Chemmozhi Salai, Perumbakkam, Chennai – 600100
सत्यमेव जयते

**கலை மற்றும் கட்டடக் கலைப்புலம்**

**நடத்தும்**

# தமிழர் மரபில் கட்டடக் கலை, சிற்பக் கலை, ஓவியக் கலை

## (Architecture, Sculpture, Painting in Tamil tradition)

## பயிலரங்கம் – 10

## (14.09.2023 முதல் 21.09.2023 வரை)

மக்களின் அடிப்படைத் தேவைகளாக உணவு, உடை, உறையுள் ஆகிய மூன்றும் அமைந்துள்ளன. ஆதிகால மாந்தர்கள் வேட்டையாடியும், மீன்பிடித்தும், கனிகளைக் கொய்தும் தம் பசியினைத் தீர்த்துக் கொண்டு, வேட்டையாடிய விலங்கின் தோல், மரப்பட்டை, தழை முதலானவற்றை ஆடையாக உடுத்தி, குகைகளிலும், பரண்களிலும் வாழ்ந்தனர். வளர்ச்சிப் படிநிலைகளில், குச்சி வீடுகள் கட்டியும், சமுதாய உணர்வு எழத்தொடங்கியவுடன் கூடி வாழ்வதற்கும், இயற்கையின் அச்சுறுத்தல், கொடிய விலங்குகளின் அச்சுறுத்தல் ஆகியவற்றிலிருந்தும் தம்மைக் காத்துக்கொள்வதற்கு ‘உறையுள்’ என்ற அடிப்படைத் தேவையை உணர்ந்தனர். அதனடிப்படையில் வசதிக்கெனவும், அழகுக்கெனவும் அமைக்குங்காலத்துக் ’கட்டடக்கலை’ மக்களின் வாழ்வியலில் சிறப்பிடம் பெறலாயிற்று. நுண்ணிய கலைத் திறத்தினாலும், கலைத் தரத்தினாலும் உயர்ந்த கட்டட வேலைப்பாடே கட்டடக்கலையாகும்.

கட்டடக் கலையின் சிறப்பினை உணர்த்தத் தண்டமிழில் தகைசான்ற சான்றுகள் பல உள்ளன. சங்க காலத்திலேயே தமிழ் மக்கள் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐந்திணைப் பாகுபாடுகளின் அடிப்படையில் பல உறைவிடங்களாகிய இல்லங்களையும், பல இல்லங்களால் உருவான ஊர்களையும் கொண்டு சிறந்த பண்பாட்டிற்கும், நாகரிகத்திற்கும் எடுத்துக்காட்டாக விளங்கினர் என்பதைச் சங்க இலக்கியங்கள் நன்குணர்த்துகின்றன.

கல்விக்கும் கலை வளர்ச்சிக்கும் கோயில்கள் பெருந்தொண்டு புரிந்துள்ளன. கோயில் வகைகளில் மாடக் கோயில், கொகுடிக் கோயில், ஞாலற்கோயில், கரக்கோயில், இளங்கோயில், பெருங்கோயில், மாடக்கோயில், மணிக்கோயில், ஆலக்கோயில் என்ற பாகுபாட்டில் தமிழ்நாட்டுக் கட்டடக்கலையின் பண்பாட்டினை உணர்த்தும் வகையில் அமைந்துள்ளன. கவின்மிகு கட்டடக்கலை, காலப்போக்கில் தமிழ்நாட்டில் கலைச் சிந்தனையாலும், செல்வ வளத்தாலும், பல்வகைச் சிறப்புடன் வளரலாயிற்று.

அழகுக் கலைகளுள் கட்டடக் கலைக்கு அடுத்தபடியாக உள்ளது சிற்பக் கலையாகும். இயற்கைக் கூறுகளையும், இயற்கை கடந்த ஆற்றல்களையும் முறையே நேரிலும், கற்பனை அனுபவத்திலும், கண்டும், உணர்ந்தும், உருவங்களாகக் கல், மரம், தந்தம் முதலியவற்றில் வடிப்பதே சிற்பக் கலையாகும். சிற்பத்திற்கு உயிரோட்டம் அளிப்பது சிற்பியின் கற்பனைச் செழுமையேயாகும். சிற்பியர் தாம் தேர்ந்தெடுக்கும் சிற்ப வகைமைக்கேற்ப, சுவரிலோ, தூணிலோ, விதானத்திலோ, சிற்ப வேலைப்பாடுகளை அமைக்கின்றனர். கருங்கல்லாலும், சலவைக்கல்லாலும், உலோகத்தாலும், தந்தத்தாலும், மண்ணாலும், மரத்தாலும், நவபாஷாணத்தாலும், சுடுசர்க்கரையோகத்தாலும் பிற ஊடு பொருள்களாலும் சிற்பங்கள் அமைக்கப்படுகின்றன.

கவின்கலைகளில் ஓவியம் என்பது முதற்கலையாக, ஒருவகையில் தாய்த்தன்மை பெற்றுள்ளது. ஆதி எழுத்துகள் கோடுகளால் வரைந்த சித்திரங்களாகவே இருந்தன என்றும், எகிப்திய எழுத்துக்கள் மக்கள்தம் கருத்தை உணர்த்திய ஓவியங்களாகவே உருப்பெற்றன என்றும் கூறுவர். அவற்றைச் சித்திர எழுத்து என்றும் கூறுவர். இயற்கையில் காணலாகும் அழகிய காட்சிகள் பழங்கால மனிதனின் உள்ளத்தில் ஏற்படுத்திய தூண்டுதல்கள் படிப்படியே அழகுணர்ச்சிகளாக மலரலாயின. அந்த உந்துதலின் வெளிப்பாடாகவே குகைச்சுவர்(கல்) மரம், சுதைச்சுவர், கட்டட விதானம், பலகை, மண்பாத்திரம், திரைச்சீலை போன்றவற்றில் சித்திர உருவங்கள் அமையலாயின.

காலப்போக்கில் சித்திரம் வரைவதில் பல்வேறு உத்திகள் கையாளப்பட்டன. ஓவியத்தைத் திறம்படப் பரிமாண அடிப்படையில் தீட்டியவன் தேர்ந்த ஓவியக் கலைஞன் ஆனான். அவனைக் ‘கண்ணுள் வினைஞன்’ என்றும், சித்திரகாரி என்றும் தமிழகத்தில் அழைத்தனர். இதுவே ஓவியத்தோற்றத்தின் வளர்நிலையாகும்.

**“எவ்வகைச் செய்தியும் உவமங்காட்டி” (516)**

என மதுரைக்காஞ்சியும்,

**“மையறு படிவத்து வானவர் முதலா,**
**எவ்வகை யுயிர்களும் உவமங் காட்டி” (3: 128-129)**

என மணிமேகலையும் ஓவியக்கலை குறித்துக் குறிப்பிடுகின்றன.

இசைக்கலையின் கலைநிகழ்ச்சி, இசைக்கருவி, ஆடல்கலையின் 108 கரணங்கள் ஆகியன சிற்பக் கலைவழிச் செதுக்கப்பட்டும், ஓவியக் கலைவழித் தீட்டப்பட்டும், கட்டடக் கலையில் அழகுபடுத்தப்படுகின்றன. இங்ஙனம் கட்டடக் கலையானது, சிற்பக் கலை, ஓவியக் கலை, இசைக் கலை, ஆடல் கலை ஆகிய நுண்கலைகளைத் தன்னில் இணைத்துக் கொண்ட வளர்ச்சிக்குரிய ஓர் சிறந்த அழகுக் கலையாகத் தனித்தன்மையுடன் திகழ்கின்றது.

கடந்த அரை நூற்றாண்டு காலமாகத் தமிழர் கட்டடக் கலை குறித்த ஆய்வுகள் வளர்ச்சி பெற்று வருகின்றன. இந்த ஆய்வுகளின் வழியாகத் தமிழர் கட்டடக் கலையின் தொன்மையும், சிறப்பும் ஆராயப்பட்டு அதன் தனித்துவமான சிறப்புகள் வெளிக்கொணரப்பட்டுள்ளன. இவற்றோடு நாம் நின்றுவிடாமல் இத்துறை சார்ந்து மேலும் பல பன்னோக்கு ஆய்வுகளை நிகழ்த்த வேண்டும்.

இவற்றைக் கருத்தில் கொண்டு பண்டைத் தமிழரின் கட்டடக்கலை மரபு, நுணுக்கம், தனித்தன்மை, பொறியியல் திறன், வளர்ச்சி நிலை ஆகியவற்றை ஆய்வு மாணவர்களுக்குப் பயிற்றுவிக்கும் நோக்கில் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம் **‘தமிழர் மரபில் கட்டடக் கலை, சிற்பக் கலை, ஓவியக் கலை’** எனும் பயிலரங்கினை நடத்தவுள்ளது. ஆய்வு மாணவர்கள் மட்டும் இப்பயிலரங்கில் பங்கேற்றுப் பயன்பெறலாம்.

ஆய்வு மாணவர்கள் நேரடியாகப் பயன்பெறும் வகையில் நடத்தப்பெறும் இப்பயிலரங்கில் கட்டடக் கலை, சிற்பக் கலை, ஓவியக் கலை, இசைக் கலை, தமிழ்த் துறை சார்ந்த அறிஞர்கள் ஆய்வுரை வழங்குவர். இவ்ஆய்வுக் களத்தை வளப்படுத்தும் வகையில் ஆய்வியல் நிறைஞர், முனைவர் பட்ட ஆய்வு மாணவர்கள் இப்பயிலரங்கில் பங்குபெற்றுப் பயன்பெறுமாறு அழைக்கிறோம்.

இப்பயிலரங்கமானது 14.09.2023 முதல் 21.09.2023ஆம் நாள் வரையில் (18.09.2023 ஒருநாள் நீங்கலாக) நடைபெறவுள்ளது. பயிலரங்க விதிமுறைகளும் விவரங்களும் கீழ்வருமாறு:

1. பயிலரங்கில் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவோரின் எண்ணிக்கை - 25.
2. பயிலரங்கு நடைபெறும் நாள்கள்: 14.09.2023 முதல் 21.09.2023ஆம் நாள் வரை. (18.09.2023 ஒருநாள் நீங்கலாக)
3. பயிலரங்கு நேரம்: 10.00 - 01.00 வரை & 02.00 - 5.00 வரை.
4. பங்கேற்பாளர்களே தங்குமிடத்தை ஏற்பாடு செய்துகொள்ள வேண்டும்.
5. மத்திய அரசு விதிமுறைகளின்படி பங்கேற்பாளர்களுக்குப் பயணப்படி, தினப்படி வழங்கப்படும்.
6. மதிய உணவும், தேநீரும் நிறுவனத்தின் சார்பில் வழங்கப்படும்.
7. பயிலரங்கில் கலந்துகொள்ள விரும்புவோர் கீழே தரப்பட்டுள்ள விண்ணப்பத்தை நிறைவு செய்து **workshopa@cict.in** என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும். இப்பயிலரங்கைப் பற்றிய கூடுதல்

தகவல்களைத் தெரிந்துகொள்ள மேற்கண்ட மின்னஞ்சல் மூலமாக மட்டுமே தொடர்புகொள்ள வேண்டும்.

8. விண்ணப்பக் கட்டணம் ஏதும் இல்லை.
9. விண்ணப்பம் உரிய வழியாக அனுப்பிவைக்க வேண்டும்.
10. செம்மொழி நிறுவன விதிமுறைகளின்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு மின்னஞ்சல் / புலனம் வழியாக ஆணை அனுப்பி வைக்கப்படும்.
11. விண்ணப்பம் வந்துசேர வேண்டிய இறுதி நாள்: **10.09.2023.** இதற்குப் பின்வரும் விண்ணப்பம் ஏற்கப்படமாட்டாது.
12. இப்பயிலரங்கில் பங்கேற்போர் 26 அமர்வுகளிலும் தொடர்ந்து கலந்துகொள்ள வேண்டும். அமர்வுக்குத் தாமதமாக வருதலைத் தவிர்த்தல் வேண்டும். தாமதம் மற்றும் இடைநிற்றல் இருப்பின் தினப்படியும் சான்றிதழும் வழங்கப்படமாட்டா.
13. இப்பயிலரங்கில் பங்கேற்கத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு **11.09.2023** அன்று தகவல் தெரிவிக்கப்படும்.
14. பங்கேற்பாளர்கள் செம்மொழி நிறுவன விதிமுறைகளைப் பின்பற்றிட வேண்டும்.

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்

(தன்னாட்சி நிறுவனம், கல்வி அமைச்சகம், இந்திய அரசு)

செம்மொழிச் சாலை, பெரும்பாக்கம், சென்னை - 600100

CENTRAL INSTITUTE OF CLASSICAL TAMIL

(An Autonomous Institution under the Ministry of Education, Government of India)

Chemmozhi Salai, Perumbakkam, Chennai - 600100

सत्यमेव जयते

## கலை மற்றும் கட்டடக் கலைப் புலம்

**நடத்தும்**

# தமிழர் மரபில் கட்டடக் கலை, சிற்பக் கலை, ஓவியக் கலை

**(Architecture, Sculpture, Painting in Tamil tradition)**

## பயிலரங்கம் – 10

**(14.09.2023 முதல் 21.09.2023 வரை)**

## விண்ணப்பப் படிவம்

<table>
<tr><td rowspan="2">1.</td><td rowspan="2">பெயர்|<br>Name</td><td colspan="2">தமிழ்</td><td colspan="4"></td><td colspan="2" rowspan="3">நிழற்படம்/<br>Photo</td></tr>
<tr><td colspan="2">English</td><td colspan="4"></td></tr>
<tr><td>2.</td><td>பிறந்த நாள் /<br>வயது Date of Birth/<br>Age</td><td colspan="6"></td></tr>
<tr><td>3.</td><td>பாலினம் | Gender<br>(✓)</td><td>ஆண்/<br>Male</td><td></td><td>பெண்/<br>Female</td><td></td><td>திருநங்கை/<br>Transgender</td><td></td><td colspan="2"></td></tr>
<tr><td>4.</td><td colspan="3">வகுப்பு | Class (✓)</td><td>பொது/<br>General</td><td></td><td>இ.பி.வ.| OBC</td><td></td><td>பட்டியல்<br>இனம் | SC/<br>ST</td><td></td></tr>
<tr><td>5.</td><td colspan="3">கல்வித் தகுதி |<br>Educational Qualification</td><td colspan="6"></td></tr>
</table>

| | | |
|---|---|---|
| 6. | ஆய்வியல் நிறைஞர் & முனைவர் பட்டப் படிப்பில் சேர்ந்த நாள்/ ஆண்டு \| Date of Joining & year in M. Phil & Ph.D. | |
| 7. | ஆய்வியல் நிறைஞர் & முனைவர் பட்ட ஆய்வுத் தலைப்பு \| M. Phil & Ph.D. Research Topic | |
| 8. | பல்கலைக்கழகம்/ கல்லூரி/ நிறுவன முகவரி (தொடர்பு எண் & மின்னஞ்சல்)<br>\| University / College/Institute Address (Contact number & Email) | |
| 9. | இல்ல முகவரி & தொடர்பு எண் \|Residential address &<br>Contact number | |
| 10 | புலன எண் \| WhatsApp number | |
| 11 | செம்மொழி நிறுவனம் முந்தைய கல்வியாண்டுகளில் நடத்திய பயிலரங்குகளில் கலந்து கொண்டீர்களா? ஆம் எனில் விவரம் தருக \| Did you attend the workshop conducted by the CICT in previous academic years? If yes, please give details | ஆம் \| Yes<br><br>இல்லை\| No |

**இடம்:**

**நாள்:** **(கையொப்பம்)**

**நெறியாளர் /துறைத் தலைவர்/**
**முதல்வர்/ பதிவாளர் உரிய முத்திரையுடன்**